## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
## அசல் வழக்கு எண் – 57/2023

**வாதி தரப்பு சாட்சி–1 கலிங்கன் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1) தாவா சொத்து மற்றும் சில சொத்துக்கள் சம்பந்தமாக குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் நான் பெற்ற தீர்ப்பினை ஒட்டி சுவாதீனம் கோரி தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளதா என்றால், எனது வழக்கறிஞரை கேட்க வேண்டும். நீதிமன்றத்தின் மூலம் சில சொத்துக்கள் சுவாதீனம் எடுத்ததாக சொல்வது எந்த வருடம், மாதம், தேதி என்றால், சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும், சரியாக ஞாபகமில்லை. நான் சுவாதீனம் எடுப்பதற்கு முன்பு அந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதி செல்வம் அனுபவம் செய்து வந்தாரா என்றால், அவரது தகப்பனார் அனுபவித்து வந்தார். அவர் இறந்த பின்னிட்டு செல்வம் அனுபவம் செய்து வந்தார். நீதிமன்றம் மூலம் சுவாதீனம் எடுத்த பின்னிட்டு நான் அனுபவம் செய்து வருகிறேன். தற்போதுவரை மேற்படி சொத்துக்களுக்கான பட்டா செல்வம் பெயரில் உள்ளதா என்றால் பட்டா மாறவில்லை.

2) நான் குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் பெற்ற தீர்ப்பு மற்றும் சுவாதீனம் ஆகியவை பெயரளவில் ஆனது எனக் கூறி 1ம் பிரதிவாதியும் மற்றும் சிலரும் சேர்ந்து தாக்கல் செய்த வழக்கு குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து தற்போதுவரை 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சுவாதீனத்தில் நான் இல்லாததால்தான் தற்போதுவரை வருவாய்துறை ஆவணங்கள் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. நான் மேற்படி விபரங்களை மறைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் எனது வழக்கை நிரூபிக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் தாவா சொத்து சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் பிரதிவாதிகளுக்கு இடையூறு கொடுக்க வேண்டியே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லியுள்ளது போல தாவா சொத்து எனக்கு எந்த காலத்திலும் சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள நபர்கள் இந்த வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை சேர்க்காத இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது சுவாதீனத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

4) நான் இவ்வழக்கை செல்வம் மற்றும் வெங்கடாச்சலம் பெயரில் தாக்கல் செய்துள்ளேன். வெங்கடாச்சலம் எனது அண்ணன். 1ம் பிரதிவாதியின் சகோதரிக்கு திருமணமாகி எவ்வளவு காலம் இருக்கும் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு மேல் இருக்கும். அவர் திருமணமான காலத்தில் இருந்து அவரது கணவர் வீட்டில் வசிக்கிறாரா என்றால் இல்லை, 1ம் பிரதிவாதியுடன்தான் வசிக்கிறார். நான் வெங்கடாச்சலத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், வெங்கடாச்சலம், பெரியசாமி இருவரும் சொத்தை விற்றுள்ளார்கள். எப்போது விற்றார்கள் என்றால் சுமார் 30 வருடங்கள் இருக்கும். யாருக்கு விற்றார்கள் என்றால் பெருமாள் மற்றும் இளமுருகனுக்கு விற்றார்கள். மேற்படி விற்பனை குறித்து எனக்கு எப்போது தெரியும் என்றால் 1 மாதம் கழித்து தெரியும்.

5) பெருமாள் மற்றும் இளமுருகனை இவ்வழக்கில் சேர்க்காததற்கு என்ன காரணம் என்றால், அவர்களை விவசாயம் செய்ய வேண்டாம் என தடுத்தேன், அவர்கள் கேட்கவில்லை. எனக்கு பங்கில்லை என்று சொன்னதால் வந்துவிட்டேன். விற்பனை நடவடிக்கைகளை நன்கு தெரிந்து கொண்டு,

தூய்மையான கரத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லாததால் எனக்கு இவ்வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல, வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**